புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 267 | 02-04-2026 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 01 | Issue: 267 | 02-04-2026 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry




## இன்று ஈரோட்டில் தேர்தல் பிரச்சாரம்...

# திமுக,, கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்..

ஈரோடு. ஏப்ரல். 02

திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு க ஸ்டாலின் இன்று ஈரோட்டில் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தல் 2026, வருகின்ற இம்மாதம் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. தொடர்ந்து மே நான்காம் தேதி பதிவான வாக்குகள் என்ன பட உள்ளது.

இந்த நிலையில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் 234 தொகுதிகளிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டு தேர்தல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த கூட்டணியின் தலைவராக உள்ள திமுக தலைவர் முதல்வர் மு க ஸ்டாலின் நான் போட்டியிடும் தனது கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

அவர் வேட்பு மனு தாக்கல் செய்த கையோடு தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். அதனைத் தொடர்ந்து நேற்று காலை முதல் திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இந்த நிலையில் ஈரோடு மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள நேற்று இரவு அவர் ஈரோடு வந்தார். ஆப்பக்கூடலில் உள்ள தனியார் சர்க்கரை ஆலையில் தங்கிய அவர் இன்று காலை 9 மணி அளவில் ஈரோடு அருகே உள்ள திண்டலில் அமைக்கப்பட்டுள்ள



பிரச்சார மேடையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளுக்கான திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்கிறார்.

என்னைத் தொடர்ந்து தேர்தல் பிரச்சாரம் நடைபெறும் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

முதல்வரும் திமுக தலைவரும் கூட்டணி கட்சிகளின் தலைவருமான மு க ஸ்டாலினை வரவேற்க ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட திமுகவும் அதன் கூட்டணி கட்சிகளும் சிறப்பாக ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

## பிரதமர் மோடி தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து புதுச்சேரியில் ஏப்.3ம் தேதி பிரசாரம் மேற்கொள்கிறார்

சென்னை, : ஏப்.2–

தமிழக சட்டப் பேரவை தேர்தல் வரும் 23ம் தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் தொடங்கியது. தேர்தலுக்கு இன்னும் குறுகிய நாட்களே உள்ளதால் அரசியல் கட்சிகளின் பிரசாரம் அனல் பறக்க தொடங்கியுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஏப்.3ம் தேதி புதுச்சேரியில் பிரசாரம் செய்யும், பிரதமர் மோடி 4ம் தேதி சென்னை வர உள்ளார். அன்றைய தினம் சென்னை மயிலாப்பூரில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட உள்ளார்.

அந்த தொகுதி பாஜவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த தொகுதியில் பாஜ சார்பில் முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் போட்டியிட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அவரை ஆதரித்து பிரதமர் மோடி பிரசாரம் செய்ய உள்ளார். மேலும், பிரமாண்ட ரோடு ஷோ நடத்தி வாக்கு சேகரிக்கவும் அவர் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதனை தொடர்ந்து கன்னியாகுமரி மற்றும் கோவை பகுதிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்தும் பிரதமர் மோடி விரைவில் பிரசாரம் மேற்கொள்ள உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கே.கே.நகர் உழவர் சந்தையில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பாக 100 சதவீதம் வாக்களிக்கும் வகையில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுடன் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## சீமான் விதிமீறல்: பாய்ந்தது வழக்கு

காரைக்குடி: ஏப்.2–

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி சட்டமன்ற தொகுதியில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டியிடுகிறார். இவர் நேற்று முன்தினம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். தொடர்ந்து இரவில் காரைக்குடி தேவர் சிலை அருகில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சீமான் பேசியதாவது: அனைவரும் தூய தமிழில் பேச வேண்டும். தமிழுடன் ஆங்கிலம் கலந்து பேசினால் தொலைத்து விடுவேன். சட்டமன்ற தேர்தலில் இலவச அறிவிப்புகளை அள்ளி வீசுகிறார்கள். டெல்லியில் சிறப்பான ஆட்சி மூலம் சிறந்த கல்வியை வழங்கிய அரவிந்த் கெஜ்ரிவால் மீது சாராய ஊழல் என்று கூறி சிறையில் அடைத்தனர். நல்லவர்களை வரவிட மாட்டார்கள். இவ்வாறு பேசினார்.

பொதுக்கூட்டத்திற்கு இரவு 10 மணிவரை மட்டுமே அனுமதி என்ற நிலையில், கூடுதலாக 8 நிமிடம் வரை சீமான் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தார். இது தேர்தல் நடத்தை விதிமீறல் என்பதால், அக்கட்சியின் பொதுக்கூட்ட ஏற்பட்டாளரான மாநில ஒருங்கிணைப்பாளர் ராமஜெயம் மீது காரைக்குடி வடக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்

## சோதனையில் சிக்கிய 82,550

திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி மணப்பாறை சாலை பிள்ளையார் கோவில்பட்டி அருகே கண்ணன் தலைமையிலான தேர்தல் நிலையான (SST) சோதனை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டிருந்தனர் அந்த வழியாக வந்த குணசேகரன் என்பவரது இருசக்கர வாகனத்தை சோதனை செய்த போது கணக்கில் வராத 82,550 பறிமுதல் செய்து தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.



## தண்டனை வழங்குவது நீதித்துறையின் அதிகாரம்: ஐகோர்ட் கிளை கருத்து

மதுரை: ஏப்.2–

காவல்துறை அதிகாரிகளுக்கு நிர்வாக நடுவர் அதிகாரங்களை வழங்கும் அரசாணைக்கு இடைக்கால தடை விதித்து உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவே தடை விதிக்கப்பட்ட நிலையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டது எப்படி...? நீதிபதி கேள்விஎழுப்பியுள்ளார். தண்டனை வழங்குவது நீதித்துறையின் அதிகாரம் என ஐகோர்ட் கிளை கருத்து தெரிவித்துள்ளது.

## ஈரோடு மேற்கு தொகுதி த மா கா வேட்பாளர் எம். யுவராஜ் தீவிர தேர்தல் பிரச்சாரம்..

### தேர்தல் அலுவலகம் திறந்தபின் பிரச்சாரத்தை தொடங்கினார்..

ஈரோடு. ஏப்ரல். 02

அதிமுக, பாஜக கூட்டணியில் ஈரோடு மேற்குத் தொகுதியில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி வேட்பாளராக போட்டியிடும் யுவராஜ் தனது தேர்தல் பிரச்சாரத்தை நேற்று துவக்கினார்.

வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் மே 4ஆம் தேதி என்ன பட உள்ளது. இந்த நிலையில் தமிழகத்தில் அரசியல் கட்சிகள் தங்களை வேட்பாளர்களை களத்தில் இறக்கி உள்ளது.




இந்த நிலையில் அதிமுக, பாஜக கூட்டணியில் உள்ள தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு ஐந்து தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், ஈரோடு மேற்கு தொகுதியும் அதில் ஒன்று.

இதில் அக்கட்சியின் மாநில பொதுச்செயலாளராக உள்ள எம் யுவராஜ் பாஜகவின் தாமரை சின்னத்தில் போட்டியிடுகிறார்.

இதற்காக பல்வேறு தேர்தல் பணிகளை முன்னெடுத்து வரும் நிலையில், ஈரோடு அருகே உள்ள திண்டலில் கட்சியின் தொகுதி தேர்தல் அலுவலகம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

இந்த தேர்தல் அலுவலக திறப்பு விழா முடிந்த பின்பு செய்தியாளர்களை சந்தித்த வேட்பாளர் எம் யுவராஜ் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வரும் என்றும் நான் போட்டியிடும் ஈரோடு மேற்கு தொகுதியில் நிச்சயம் வெற்றி பெறுவேன் என்றும் செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தொண்டர்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் திறந்தவெனில் ஈரோடு மேற்கு தொகுதி வாக்காளர் அவர்களிடம் அவர் வாக்கு சேகரித்தார்.

இந்த நிகழ்ச்சிகளில் அதிமுக, பாஜக, பாமக மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## நெல்லித்தோப்பு தொகுதியில் லட்சிய ஜனநாயக கட்சியின் தீவிர வாக்கு சேகரிப்பு - பல தரப்பினரின் ஆதரவு அதிகரிப்பு

புதுச்சேரி, ஏப்.2–

புதுச்சேரி நெல்லித்தோப்பு தொகுதியில் இலட்சிய ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஜெயக்குமார் அவர்களை ஆதரித்து, தர்பூசணி சின்னத்தில் வாக்களிக்குமாறு வலியுறுத்தி கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இதன் ஒரு பகுதியாக, நெல்லித்தோப்பு தொகுதிக்குட்பட்ட புவன்கரே வீதியில் வீடு வீடாகச் சென்று பொது மக்களை நேரில் சந்தித்து ஆதரவை கோரினார். இந்நிகழ்வில் தொகுதி தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மேலும், நெல்லித்தோப்பு மீன் மார்க்கெட் பகுதியில் உள்ள கழிவுநீர் வாய்க்காலின் நிலையை ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்கள் நேரில் பார்வையிட்டார். அப்பகுதி பொதுமக்கள், அந்த வாய்க்காலை தூர்வாரி சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வைத்தனர்.



அதனைத் தொடர்ந்து, மார்க்கெட் பகுதியில் கடை கடையாக சென்று வியாபாரிகளை பொதுமக்களையும் சந்தித்து, ஜெயக்குமார் அவர்களுக்கு ஆதரவு கோரி வாக்குகளை சேகரித்தார்.

இதற்கிடையில், நெல்லித்தோப்பு தொகுதி வேல்முருகன் நகரைச் சேர்ந்த திமுக கட்சியில் இருந்து விலகிய பன்னீர், மதிவாணன், ராஜேந்திரன், சக்திவேல், சிலம்பரசன் உள்ளிட்டோர், ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களின் முன்னிலையில் இலட்சிய ஜனநாயக கட்சியில் இணைந்தனர். இந்நிகழ்வில் கட்சியின் தொண்டரணி தலைவர் மதன் உடன் இருந்தார்.

மேலும், என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர், ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் மற்றும் வேட்பாளர் ஜெயக்குமார் ஆகியோருக்கு நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். இதில் மாநில இளைஞரணி செயலாளர் பாலு, தொகுதி பொதுச் செயலாளர் பிரசாந்த், திருபுவனை தொகுதி தலைவர் மதன்ராஜ், இளைஞரணி செயலாளர் தாஸ், செல்வகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நெல்லித்தோப்பு தொகுதியில் நடைபெறும் இந்த தீவிர பிரச்சாரம் மற்றும் பல்வேறு தரப்பினரின் ஆதரவு, இலட்சிய ஜனநாயக கட்சிக்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

# சேலம் மாவட்டம் இபிஎஸ் கோட்டையாகவே இருக்குமா!?



சேலம். ஏப்.2–

சேலம் மாவட்டம் எப்போதுமே அதிமுகவின் கோட்டையாகத் திகழும் என்று அக்கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி கூறி வந்தாலும், அது உண்மைதானா?

சந்தேகமா? என்பதே தற்போதைய பேசுபொருளாக மாறியிருக்கிறது.

சேலத்தை அதிமுகவின் கோட்டையாக தக்க வைத்துக் கொள்வது, எடப்பாடி பழனிசாமிக்கு தற்போது சற்று சவாலானதாக இருக்கலாம் என்பதே பொதுவான கருத்து.

சேலத்தை கைப்பற்றும் முனைப்பில் ஆளுங்கட்சி, பதவிக்கு வந்தது முதலே பல்வேறு களப்பணிகளை செய்து வந்துள்ளது. இதில், மூத்த தலைவர் கே.என். நேரு சேலத்துக்கு பொறுப்பேற்று, அங்குள்ள பிரச்னைகளில் கவனம் செலுத்தியிருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், சேலத்திலிருந்து சில நிர்வாகிகளுக்கு கூடுதல் பொறுப்புகள் மற்றும் பதவிகள் கொடுத்து, திமுகவுக்கு சேலம் மாவட்டம் மிகவும் முக்கியம் என்பதை வெளிப்படுத்தியிருந்தது. இது சேலத்தில் திமுக வாக்குகளை அதிகரிக்கச் செய்திருக்கலாம்.

மற்றொரு பக்கம், அதிமகவில் உள்ள பாமகவுக்கு என கணிசமான வாக்குகள் உள்ளன. ஆனால், தற்போது பாமக பிளவுபட்டிருப்பதால், வாக்குகளும் சிதறக்கூடும். அதிமுக, சேலத்தில் 11 தொகுதிகளில் இரண்டு தொகுதிகளை பாமகவுக்கு ஒதுக்கியிருக்கிறது. அதிமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாஜக, சேலம் வடக்கு தொகுதியைக் கேட்டிருந்தது. அமமுகவோ வீரபாண்டி தொகுதியை கேட்டு கிடைக்காததால், அந்தக் கட்சிகளின் ஆதரவாளர் கள் அதிருப்தியில் உள்ளனர். அது தேர்தலில் எதிரொலிக்குமா என்பது தெரியவில்லை.

இதனுடன், தவெகவும் திமுகவுக்கு எதிரான மற்றும் இளைஞர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளதால், அதிமுகவுக்கு என இருக்கும் கணிசமான வாக்குகள் சிதறி, கோட்டை கைவிரிக்குமோ என்று அதிமுகவினர் அஞ்சுவதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், எடப்பாடி பழனிசாமிக்கு என்று சேலத்தில் மக்கள் செல்வாக்கு உள்ளது. அவர்களது ஆதரவாளர்கள், கோட்டையை தக்க வைத்துக் கொள்ள தீவிரமாக செயல்படுவார்கள் என்றும் கணிக்கப்படுகிறது.

சேலம் மாவட்டம் பற்றிய தகவல்கள்!

1792, ஏப்ரல் 4ஆம் தேதி பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டது சேலம். இந்த மாவட்டம் தமிழகத்துக்கு மூன்று முதல்வர்களைத் தந்துள்ளது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அருகே உள்ள குமாரமங்கலத்தில் பிறந்தவர் டாக்டர் சுப்பராயன். ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர். 1926 டிசம்பர் முதல் 1930 அக்டோபர் வரை சென்னை மாகாண முதல்வராக இருந்தார்.

தமிழகத்தில் 1952 முதல் 1954 வரை முதல்வராக இருந்தவர் மூதறிஞர் ராஜாஜி. சுதந்திரத்துக்குப் பிறகு தமிழகத்தின் முதல் முதல்வர் ராஜாஜி.

சேலம் மாவட்டத்துக்கு பெருமை சேர்த்தவர்களில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலருமான எடப்பாடி கே. பழனிசாமியும் ஒருவர்.

# கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூரில் அதிமுக தேர்தல் பணிமனை அலுவலகம் திறப்பு: முன்னாள் எம்.எல்.ஏ. டி.எம். தமிழ்செல்வம் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்!



கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் பகுதியில் அதிமுக சார்பில் தேர்தல் பணிமனை அலுவலகத் திறப்பு விழா நேற்று எழுச்சியுடன் நடைபெற்றது.

ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளரும், கழகப் பொதுக்குழு உறுப்பினருமான முன்னாள் எம்.எல்.ஏ. டி.எம். தமிழ்செல்வம் அவர்கள், மத்தூரில் அமைக்கப்பட்டுள்ள புதிய தேர்தல் பணிமனை அலுவலகத்தை ரிப்பன் வெட்டி கோலாகலமாகத் திறந்து வைத்தார். தொடர்ந்து, அலுவலகத்தில் அவர் குத்துவிளக்கேற்றி முறைப்படி தேர்தல் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தைக் கொண்டாடும் வகையில், விழாவில் கலந்து கொண்ட தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு லட்டு மற்றும் மிச்சர் உள்ளிட்ட இனிப்புகள் வழங்கப்பட்டன. முன்னதாக விழாவுக்கு வருகை தந்த வேட்பாளருக்கு, அதிமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

கூட்டணி கட்சிகள்

இவ்விழாவில் அதிமுகவின் மாவட்ட, ஒன்றிய மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர். மேலும், கூட்டணி கட்சிகளின் முக்கியப் பொறுப்பாளர்களும், நிர்வாகிகளும் இதில் பங்கேற்று சிறப்பித்தனர். தேர்தல் களப்பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வது குறித்தும், தொகுதியில் வாக்குச் சேகரிப்பினைத் தீவிரப்படுத்துவது குறித்தும் இதன்போது ஆலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மத்தூர் ஒன்றிய அதிமுக நிர்வாகிகள், கூட்டணி கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர். இந்த அலுவலகத் திறப்பு விழாவினைத் தொடர்ந்து, மத்தூர் பகுதியில் தேர்தல் பணிகள் தற்போது விறுவிறுப் படைந்துள்ளன.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவ்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி பவானி பேருந்து நிலைய்தில் தேர்தல் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியில் ஒயிலாட்டம், கரகாட்டம், கட்டைக்கால் ஆட்டம், சிலம்பாட்டம் மற்றும் கும்மியாட்டம் துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் திட்ட இயக்குனர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, நகராட்சி ஆணையர், வட்டார வளர்ச்சி அலுவர்கள் உட்பட சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் நீர் மோர் பந்தல் பொதுமக்களுக்கு திறக்கப்பட்டுள்ளது



நடிகர் ராகவா லாரன்ஸ் மக்கள் சேவை நற்பணி மன்றம் சார்பில் பொதுச் செயலாளர் சங்கர் அண்ணா அவர்களின் ஆலோசனை ஏற்று விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம் கிராமத்தில் செஞ்சி ஒன்றிய தலைவர் சந்தோஷ் லாரன்ஸ் முன்னிலையில் சத்தியமங்கலம் நிர்வாகி மணி லாரன்ஸ் முரளி இவர்களின் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் பொதுமக்களுக்கு தாகத்தை தீர்க் நீர் மோர் பந்தல் விழுப்புரம் மாவட்ட தலைவர் தலைவர் பாசமிகு வழக்கறிஞர் தமிழ் லாரன்ஸ் அவர்கள் திறந்து வைத்தார் பொது மக்களுக்கு நீர் மோர் தர்பூசணி பொதுமக்களுக்கு கொடுத்தும் மகிழ்ந்தார் அவருடன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோபி லாரன்ஸ் துணை ஒருங்கிணைப்பாளர் அருண்லாரன்ஸ் வழக்கறிஞர் அணி மகேஷ் மேல்மலையனூர் ஒன்றிய தலைவர் வெங்கடேஷ் செஞ்சி நகரம் அன்னை வீரா வல்லம் ஒன்றியம் சந்தானம் மற்றும் சென்று ஒன்றியம் ஜோதி ஆறுமுகம் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

## திருவள்ளூர் தொகுதி ராமதாஸ் பா.ம.க வேட்பாளராக நா.வெங்கடேசன்

### மருத்துவர் ராமதாஸ் அறிவிப்பு

திருவள்ளூர் ஏப் 02 :

சசிகலாவின் "அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம்" கட்சியுடன்,மருத்துவர் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சி கூட்டணி அமைந்துள்ளது.23 தொகுதிகளுக்கான முதல் கட்ட வேட்பாளர் பட்டியலை சசிகலா திங்கட்கிழமை வெளியிட்டார்.



இந்நிலையில் முதல் கட்டமாக ஐந்து தொகுதிகளுக்கான வேட்பாளர்களை மருத்துவர் ராமதாஸ் வெளியிட்டார். அதன்படி முன்னாள் வெங்கத்தூர் முதல்நிலை ஊராட்சி ஒன்றிய கவுன்சிலரும் ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட அமைப்பு செயலாளருமான நா.வெங்கடேசன் திருவள்ளூர் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

திருவள்ளூர் தொகுதி பாமகவுக்கு ஒதுக்கப்பட உள்ளதால் ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட அமைப்பு செயலாளருமான நா.வெங்கடேசன் ஒன்றிய கவுன்சிலராக இருக்கும் போது சாலை வசதி,குடிநீர் வசதி போன்ற அனைத்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து பொது மக்களின் அமோக வரவேற்பை பெற்றுள்ளார்.

எனவே ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட அமைப்பு செயலாளருமான நா. வெங்கடேசன் திருவள்ளூர் தொகுதியில் போட்டியிட்டு பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் மற்றும் பாமக தொண்டர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊடக கண்காணிப்பு அறையின் செயல்பாடுகளை 139 ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி தேர்தல் செலவின பார்வையாளர் அபினவ் உஜ்ஜய்னியா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## வேட்பாளர் அறிமுக கூட்டம்:



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பரமக்குடி டாக்டர் முத்தையா, திருவாடானை கீர்த்திகா முனியசாமி, முதுகுளத்தூர் மலேசியா பாண்டி ஆகிய அதிமுக வேட்பாளர்களை அறிமுகம் செய்து தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். இந்த அறிமுக கூட்டத்தில் இராமநாதபுரம் ராஜா, இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் முனியசாமி, மாவட்ட, நகர, ஒன்றிய அதிமுக கழக நிர்வாகிகள், பாஜக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். பரமக்குடி பேருந்து நிலையத்தின் அருகில் நடைபெற்ற கூட்டத்தில் மக்கள் வெள்ளத்தில் எடப்பாடி பழனிசாமி இரட்டை இலை மற்றும் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் தாமரை சின்னத்திலும் வாக்கு செலுத்த பரப்புரை மேற்கொண்டார்.



தமிழக வெற்றிக் கழக தலைவர் தளபதி விஜய் அவர்களின் பேராதருடன் உருளையன்பேட்டை தொகுதியில் நேயம் மக்கள் கழக தலைவர் அண்ணன் நேரு(எ)குப்புசாமி MLA அவர்கள் தொடர்ந்து மக்கள் சேவை செய்திட வரிசை எண் : 7 குக்கர் சின்னத்தில் வாக்களியுங்கள்... என்று குபேர்நகர் வார்டு வாஞ்சிநாதன் வீதி, சுப்ரமணிய சிவா வீதி, காமராஜர் வீதி, குபேர் நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வீடு வீடாக வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.... மேலும் மேற்கண்ட பகுதி மக்களின் நலனுக்காக வாஞ்சிநாதன் வீதி, சுப்பிரமணிய சிவா வீதி, காமராஜர் வீதி, சுற்றியுள்ள சாலைகள் புதிதாக அதிநவீன சிமெண்ட் சாலையாக மாற்றப்பட்டுள்ளது.

மேலும் மக்கள் பயன்பாட்டிற்காக குபேர் நகர் பகுதியில் புதிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்து அதன் மூலம் சுத்தமான சுகாதாரமான குடிநீர் பொது மக்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உருளையன்பேட்டை தொகுதியில் சொந்த இடங்களில் அங்கன்வாடி மையங்கள் இல்லாமல் வாடகை இடங்களாக இருந்தது இதனை மாற்றி அரசு இடங்களை ஆக்கிரமித்து வைத்த நபர்களிடமிருந்து இடங்களை மீட்டு அவ்விடங்களில் புதிய அங்கன்வாடி மையங்கள் அமைக்கப்பட்டு அதனை மக்கள் பயன்பட்டு கொண்டுவரப்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதியில் மின் பற்றாக்குறை போகும் விதமாக புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகள் தொடர வாக்களியுங்கள் வரிசை எண் : 7 குக்கர் சின்னத்தில் என்று வாக்குகள் சேகரிக்கப்பட்டது. நிகழ்வில் உருளையன்பேட்டை தொகுதி தமிழக வெற்றிக் கழக பிரமுகர்களும், நிர்வாகிகளும் மற்றும் நேயம் மக்கள் கழக நிர்வாகிகளும், பிரமுகர்களும் என பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

## FORMAT-C-1

## DECLARATION ABOUT CRIMINAL CASES

As per the judgement dated 25*th* September, 2018 of Hon'ble Supreme Court in wp (civil) No. 536 of 2011

Name and address of candidate : **S. SHAKUL HAMED**
No 1. Main Road Pargoor
Puducherry.

Name of political party : Independent

Name of Election : Puducherry Assembly - 2026 General Election.

Name of constitvency : VILLIANUR

I. S.SHAKUL HAMED, a candidate for the above mentioned Election, declare for public information the following details about my Criminal Antecedents:

(A) Pending Criminal cases

| S1 NO | Name of court | Case No and dated | Status of care(s) | Section 10 of Acts concerned and brief description of Offence (s) |
|---|---|---|---|---|
| 1. | NIL | 30/2024 03.02.2024 | Case charged and same was yet to be taken court | v/s 509 IPC r/w.34 |

## தட்டாஞ்சாவடி தொகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட முன்னாள் முதலமைச்சர் வைத்திலிங்கம்!



புதுச்சேரி, ஏப்.2–

புதுச்சேரியில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் புதுச்சேரியின் தட்டாஞ்சாவடி தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான வைத்திலிங்கம், அப்பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

தனது வெற்றியை உறுதி செய்யும் நோக்கில், தொகுதியின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்ற வைத்திலிங்கம், அங்கிருந்த பொதுமக்களை நேரில் சந்தித்து ஆதரவு திரட்டினார். அவருடன் காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி ஆதரவாளர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

வாக்கு சேகரிப்பின் போது, காங்கிரஸ் கட்சியின் சின்னமான 'கை' சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார். முன்னாள் முதலமைச்சரின் வருகையையொட்டி, தொகுதியில் கூட்டணி கட்சியினரிடையே பெரும் உற்சாகம் காணப்பட்டது.

## புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதியில் 12 மணி நேர குடிநீர் விநியோகம்: சுயேச்சை வேட்பாளர் பிரபாகரன் வாக்குறுதி



புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் சமூக சேவகர் பிரபாகரன், 'சிலிண்டர்' சின்னத்தில் வாக்கு சேகரித்து தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

நேற்று திருவள்ளுவர் நகரில் தனது பிரச்சாரத்தைத் தொடங்கிய பிரபாகரனுக்கு, அப்பகுதி இளைஞர்கள் பட்டாசு வெடித்தும், மாலை அணிவித்தும் உற்சாக வர வேற்பு அளித்தனர். நூற்றுக்கணக்கான பெண்கள் வீதி முழுவதும் பூக்களைத் தூவியும், ஆரத்தி எடுத்தும் அவருக்கு ஆதரவு தெரிவித்தனர்.

பிரச்சாரத்தின் போது மக்களிடையே பேசிய பிரபாகரன் தெரிவித்ததாவது: நான் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக, சிறு வயது முதலே அரசியலில் பயணித்து வருகிறேன். முத்தியால்பேட்டை மண்ணின் மைந்தனான எனக்கு, இங்கு வசிக்கும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் என்னவென்று நன்கு தெரியும்."

"உங்கள் வீட்டு விசேஷங்கள் முதல் துக்க நிகழ்வுகள் வரை நான் எப்போதும் உங்களோடு இருந்து வருகிறேன். நீங்கள் கேட்கும் உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகிறேன்.""நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அரசு மூலம் கிடைக்கும் அனைத்து நலத்திட்டங்களையும் உடனுக்குடன் பெற்றுத் தருவேன். குறிப்பாக, இத்தொகுதியின் முக்கியப் பிரச்சினையான குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க, தினமும் 12 மணி நேரம் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய உரிய நடவடிக்கை எடுப்பேன்."

இவ்வாறு அவர் உறுதி அளித்தார். இந்த நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

## புதுச்சேரி உழவர்கரை: கரும்பலகை சின்னத்திற்கு வாக்கு சேகரித்த விசிக வேட்பாளர் செல்வ புஷ்பலதா!



புதுச்சேரி, ஏப் 02,

புதுச்சேரி சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, உழவர்கரை தொகுதியில் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் செல்வ புஷ்பலதா தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து ஆதரவு திரட்டிய அவர், தனது கட்சியின் சின்னமான 'கரும்பலகை' சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார். இந்த வாக்கு சேகரிப்பின் போது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் உடன் இருந்தனர்.

பொதுமக்களிடம் பேசிய வேட்பாளர் செல்வ புஷ்பலதா, தான் வெற்றி பெற்றால் தொகுதியின் வளர்ச்சிக்கும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் முன்னுரிமை அளிக்கப்படும் என்று உறுதி அளித்தார். வேட்பாளரின் தீவிர பிரச்சாரத்தால் அப்பகுதியில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

## புதுச்சேரி உழவர்கரை தொகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பு: விசிலுக்கு ஆதரவு தெரிவித்து உற்சாக வரவேற்பு அளிக்கும் பொதுமக்கள்!



புதுச்சேரி, ஏப்ரல் 2:

புதுச்சேரி மாநிலம், உழவர்கரை தொகுதியில் நடைபெறவுள்ள தேர்தலில், தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சசி பாலன், தனது தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

தனக்கு ஒதுக்கப்பட்ட 'விசில்' சின்னத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், சசி பாலன் வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து ஆதரவு திரட்டினார். பிரச்சாரத்தின் போது, சசி பாலன் செல்லும் வழிநெடுகிலும், தமிழக வெற்றி கழகத்தின் தொண்டர்களும், அந்தந்த பகுதி பொதுமக்களும் மிகுந்த உற்சாகத்துடன் அவரை வரவேற்றனர்.

வேட்பாளருக்கு ஆரத்தி எடுத்தும், மாலை மற்றும் சால்வை அணிவித்தும் மக்கள் தங்களது ஆதரவை வெளிப்படுத்தினர். மக்களின் இந்த அன்பான வரவேற்பு, தனது வெற்றிக்கு உத்வேகம் அளிப்பதாக வேட்பாளர் சசி பாலன் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார். உழவர்கரை தொகுதியில் வேட்பாளரின் இந்த அதிரடி வாக்கு சேகரிப்பு, அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.

## புதுச்சேரி வில்லியனூரில் எனது வெற்றி உறுதி: என்.ஆர்.காங். வேட்பாளர் ரவிக்குமார் பேட்டி



ரவிக்குமார்

புதுச்சேரி, ஏப்.2–

புதுச்சேரி வில்லியனூர் தொகுதி மக்களின் நலனுக்காகவும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தப் போவதாக என்.ஆர்.காங்கிரஸ் வேட்பாளர் ரவிக்குமார் உறுதியளித்துள்ளார்.

வில்லியனூர் தொகுதி மாணவர்கள் உயர்கல்வி பயில ஏதுவாக, எனது சொந்தச் செலவில் இலவச கோச்சிங் சென்டர் அமைத்துத் தரப்படும். போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அங்கேயே அளிக்கப்படும் என அவர் வாக்குறுதி அளித்தார்.

முதல்வர் ரங்கசாமி அவர்கள் தொகுதி மீது வைத்துள்ள அக்கறையினால், ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியின் கீழ் சாலைகள் மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்படும்.

வெற்றி பெற்றவுடன் நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம், வில்லியனூரில் நவீன வசதிகள் கொண்ட நூலகம் மற்றும் புதிய பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்கப் படும். புதுச்சேரிக்கு இணையாக வில்லியனூரில் உள்ள அரசு சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகளுடன் கூடிய அனைத்து சிகிச்சைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் முழுநேர மருத்துவக் கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ஜி.என்.பாளையம் ஐயனார் கோவில் மற்றும் ஒதியம்பட்டு நான்கு ரோடு சந்திப்பு ஆகிய பகுதிகளில் முழுநேரமும் செயல்படும் புதிய புறக்காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்பட்ட முதல்வரின் வேட்பாளராக நான் போட்டியிடுவதால், முதியோர்கள், இளைஞர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என அனைத்து தரப்பினரும் எனக்கு முழு ஆதரவு அளித்து வருகின்றனர். இதனால் எனது வெற்றி ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுவிட்டது என்று அவர் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

இறுதியாக, "முதல்வர் ரங்கசாமி தலைமையிலான தே.ஜ. கூட்டணி ஆட்சியின் சாதனைகளைத் தொடர்ந்திட எனக்கு 'ஜக்' (Jug) சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்று அவர் மக்களிடம் கேட்டுக் கொண்டார்.






## உழவர்கரை தொகுதியில் குக்கர் சின்னத்திற்கு ஆதரவு: சுயேட்சை வேட்பாளர் சரவணனுக்கு உற்சாக வரவேற்பு!



புதுச்சேரி, ஏப்ரல் 2:

புதுச்சேரி மாநிலம், உழவர்கரை தொகுதியில் வரும் தேர்தலுக்காக சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் சரவணன், தனது தேர்தல் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தியுள்ளார்.

தனக்கு ஒதுக்கப்பட்ட 'குக்கர்' சின்னத்தில் வாக்குக் கேட்டு, தொகுதியின் பல்வேறு பகுதிகளில் அவர் நேற்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். வேட்பாளர் சரவணனுடன் அப்பகுதி இளைஞர்கள் ஏராளமானோர் திரளாகப் பங்கேற்று, அவருக்கு ஆதரவாக முழக்கங்களை எழுப்பினர்.

பிரச்சாரத்தின் போது, வழிநெடுகிலும் உள்ள பொதுமக்கள் வேட்பாளர் சரவணனுக்கு ஆரத்தி எடுத்தும், அவர் மீது பூக்கள் தூவியும் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். மக்களின் இந்த வரவேற்பு தமக்கு மிகுந்த உற்சாகத்தை அளிப்பதாகக் கூறிய வேட்பாளர் சரவணன், தொகுதி மக்களின் மேம்பாட்டிற்காகத் தொடர்ந்து பாடுபடுவேன் என்று வாக்குறுதி அளித்தார்.

## உழவர்கரை தொகுதி: 'ஸ்டெதஸ்கோப்' சின்னத்தில் சுயேச்சை வேட்பாளர் அருள் செழியன் தீவிர வாக்குச் சேகரிப்பு!



புதுச்சேரி: ஏப்.2–

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், உழவர்கரை தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் சுயேச்சை வேட்பாளர் அருள் செழியன் நேற்று தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

அவருக்கு ஒதுக்கப்பட்ட 'ஸ்டெதஸ்கோப்' சின்னத்தை முன்னிறுத்தி, வீதி வீதியாகச் சென்று மக்களிடம் ஆதரவு கோரினார். இந்தப் பிரச்சாரத்தின் போது:

தொகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை வசதி மற்றும் சுகாதார மேம்பாடு குறித்து கேட்டறிந்தார்.

தான் வெற்றி பெற்றால் தொகுதி மக்களின் கோரிக்கைகள் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தார்.

பொதுமக்கள் ஆதரவு:

அருள் செழியன் வாக்குச் சேகரிக்கச் சென்ற இடமெல்லாம் அந்தந்த ஊர் பொதுமக்கள் திரளாக வந்து அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் எனப் பலரும் அவருடன் இணைந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது. சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் அருள் செழியன், தனது சின்னமான ஸ்டெதஸ்கோப்பை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்.

இருக்கும் போது
ரத்ததானம்.... இறந்த பின்
கண்தானம் செய்வீர்...




தமிழ்நாட்டில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது இந்த கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்கும் வகையில் கோவை நஞ்சப்பா சாலையில் உள்ள செல்வம் ஏஜென்சீஸ் மற்றும் அம்பாள் அறக்கட்டளை சார்பில் செல்வம் ஏஜென்சீஸ் நிர்வாக இயக்குனர் நந்தகுமார்,தலைமைச் செயல் அதிகாரி அனிஸ் பிரஜ்வின் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.உடன் பொது மேலாளர் சாமியப்பன்,மேலாளர் சாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும் மூன்றாம் ஆண்டு துவக்க விழா என்பது குறிப்பிடத்தக்கது.

## 100% வாக்களிக்க விழிப்புணர்வு பேரணி



வந்தவாசி, ஏப் 02:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் நூறு சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி பழைய பேருந்துநிலையத்திலிருந்து தேரடி வரை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் ஏஏபி கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் கற்க கசடற கல்வி அமைப்பினர் பங்கேற்று பொது மக்களிடையே துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். முன்னதாக, பேரணியை தேர்தல் நடத்தும் அலுவலர் எஸ்ஆர்என்.மதுசெழியன் கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் துணை தேர்தல் நடத்தும் அலுவலர் பா.ஜெய வேல், வந்தவாசி விஏஓ அர்ஜுனன் மற்றும் அமைப்பு நிறுவனர் இரா. பாஸ்கரன், ஏஏபி மேலாளர் முஸ்தபா, சமூக ஆர்வலர்கள் மலர் சாதிக், கேப்டன் பிரபா கரன், சு.தனசேகரன், முகமது ஜியா உள்ளிட்ட வருவாய் துறை அதி காரிகள் பங்கேற்றனர்.

# ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமிக்கு அமோக வரவேற்பு..

## உரிமையோடு பேசி ஆதரவு தரும் தொகுதி மக்கள்..





ஈரோடு. ஏப்ரல். 02

ஈரோடு மேற்கு தொகுதியில் பிரச்சாரம் செய்து வரும் அமைச்சர் முத்துசாமிக்கு, தொகுதி மக்கள் அமோக வரவேற்பு வழங்கி வருகின்றனர்.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 இந்த மாதம் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் மே 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற இருக்கின்றது.

இந்த நிலையில் திமுக தலைமையில் உள்ள மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் தொகுதி பங்கீடு முடிந்து வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் தங்களது தொகுதிகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடும், திமுக தெற்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் சு. முத்துசாமி தனது தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார்.

கடந்த இரு தினங்களாக அவர் பல்வேறு பகுதிகளுக்கு சென்று தேர்தல் பிரச்சாரம் செய்து வரும் நிலையில், அவருக்கு தொகுதி மக்கள் ஆரத்தி எடுத்து அன்போடு வரவேற்று தங்களின் ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.


இந்த நாளில் நேற்று 1 ஆம் தேதி காலை ஆறு முப்பது மணிக்கு தனது பிரச்சாரத்தை மேற்கொண்ட அமைச்சர் முத்துசாமி தொகுதிக்கு உட்பட்ட, பெரியார் நகர் பகுதி வார்டு 32 மற்றும் 33, ஜெகநாதபுரம் காலனி நேரு வீதி, அம்பேத்கர் நகர், காமராஜர் வீதி, மோகன் குமாரமங்கலம் வீதி, குமரன் மெயின் வீதி, மேற்கு அம்பேத்கர் வீதி, கண்ணகி வீதி, புதூர் வீதி, டீச்சர்ஸ் காலனி, கோவலன் வீதி ஆகிய பகுதிகளில் பொதுமக்களை சந்தித்து அவர் தீவிர தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

அப்போது அவருக்கு தொகுதி மக்கள் ஆரத்தி எடுத்து அன்போடு வரவேற்று தங்களின் ஆதரவை தெரிவித்தனர்.

இந்த பிரச்சாரத்தில் திமுக மற்றும் மதசார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டம் பவானி அருள்மிகு ஸ்ரீ சங்கமேஸ்வரர் ஆலயம்..

## அறங்காவலர் குழு தலைவராக சக்தி குழும தலைவர டாக்டர் எம். மாணிக்கம் தேர்வு..



ஈரோடு. ஏப்ரல். 02

ஈரோடு மாவட்டம் பவானியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ சங்கமேஸ்வரர் ஆலயத்தின் அறங்காவலர் குழு தலைவராக சக்தி குழுமத்தின் தலைவர் டாக்டர் எம். மாணிக்கம் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பிரசித்தி பெற்ற சிவாலயங்கள் மற்றும் கோவில்கள் உள்ளன. இதில் மிகவும் பிரசித்தி பெற்ற கோவிலாக விளங்குவது பவானி அருள்மிகு ஸ்ரீ சங்கமேஸ்வரர் திருக்கோவில் ஆகும். இந்தக் கோவில் அமைந்துள்ள பகுதியில் தான் காவேரி ஆறு மற்றும் பவானி ஆறு ஒன்றாக கலக்கின்றது.

இதனால் இந்த இடத்தை இரண்டு ஆறுகள் ஒன்றாக சங்கமிப்பதால் இந்த இடத்தை பவானி கூடுதுறை என்றும் காலம் காலமாக அழைக்கப்பட்டு வருகிறது.

இதன் காரணமாகவே அங்கு பிரதானமாக அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ சங்கமேஸ்வரர் ஆலயத்திற்கு, நதிகள் சங்கமிக்கும் சங்கமேஸ்வரர் என்று அழைக்கப்படுவதாக ஒரு ஐதீகம் உள்ளது. மேலும் ஈரோடு மாவட்டம் பவானி, நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் இரண்டு ஊர்களும் காவேரி ஆற்றங்கரையோரம் அமைந்துள்ளது ஒரு சிறப்பு. மேலும் இரண்டு நகரங்களுக்கும் இடையில் ஒரு பாலம் தான் பொறுக்க உள்ளது.

இந்த அருள்மிகு ஸ்ரீ சங்கமேஸ்வரர் ஆலயத்தை சேர்ந்த பல்வேறு கோவில்கள் உள்ளது.

அதோடு பல்வேறு சிறப்பு மிக்க பவானி அருள்மிகு ஸ்ரீ சங்கமேஸ்வரர் திருக்கோவில் மடியில் சங்கமிக்கும் பவானி கூடுதுறை என்ற அந்த இடத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள், பொதுமக்கள் நாள்தோறும் குறிப்பாக பௌர்ணமி அமாவாசை மற்றும் விசேஷ நாட்களில் இங்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்து புனித நீராடி ஆலயத்தை வலம் வந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம்.

மேலும் தங்களின் குடும்பங்களில் நடக்கும் சுப காரியங்கள் மற்றும் பரிகார காரியங்கள், முன்னோர்களுக்கு வழங்கப்படும் தர்ப்பணம் உள்ளிட்டவை இங்கே மக்களால் நம்பிக்கையோடு செய்யப்பட்டு பிரசித்தி பெற்றது. இதனால் இந்த திருக்கோவிலுக்கு காரியம் கைகூடும் சங்கமேஸ்வரர் என்று பொதுமக்களால் பக்தர்களால் அன்போடு அழைக்கப்படும் வருகிறது.

தமிழ்நாடு இந்து சமய அறநிலைத்துறை சார்பில் செயல்பட்டு வரும் இந்த பவானி அருள்மிகு ஸ்ரீ சங்கமேஸ்வரர் ஆலயத்திற்கு, இந்து சமய அறநிலைத்துறை வழிகாட்டுதலின்படி அறங்காவலர் குழு தேர்வு நடைபெற்றது.

இதில் சங்கமேஸ்வரர் மற்றும் அதை சுற்றியுள்ள கோயில்களுக்கும் அறங்காவலர் குழு தலைவராக, பொள்ளாச்சி ஸ்ரீ சக்தி குழுமத்தின் தலைவராக உள்ள ஐயா டாக்டர் எம். மாணிக்கம் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அறங்காவலர் குழு தலைவராக தேர்வு செய்யப்பட்ட சக்தி குழும தலைவர் ஐயா டாக்டர் எம். மாணிக்கம் அவர்களை பல்வேறு தரப்பினரும் பொதுமக்களும் பக்தர்களும் அன்போடு வாழ்த்தி சென்றனர்.

# பத்தாண்டுகள் தொடர்ச்சியாக பணிபுரிந்த ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்யவேண்டும்

## * நாம் தமிழர் தொழிலாளர் நலச்சங்கம் நடத்திய வழக்கில் L&T நிர்வாகத்திற்கு புதுச்சேரி தொழிலாளர் நீதிமன்றம் உத்தரவு

புதுச்சேரி, ஏப்.2–

புதுச்சேரி சேதராப்பட்டு தொழிற்பேட்டையில் இயங்கி வரும் L&Tதொழிற்சாலையில் தொடர்ச்சியாக பத்தாண்டுகள் மேலாக பணிபுரிந்த ஒப்பந்தத்தொழிலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி சண்முகவேல் செகதீசன் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென நாம் தமிழர் தொழிலாளர் நலச்சங்கத்தின் சார்பில் 2019ல் தொழிலாளர் சமரச அதிகாரிகள் முன்பு தொழில்தாவா தொடங்கப்பட்டு புதுச்சேரி அரசாணை வெளியிடப்பட்டு புதுச்சேரி தொழிலாளர் நீதிமன்றத்தில் (ID3/2020 ) கடந்த நான்கு ஆண்டுகளாக விசாரணை நடைபெற்று வந்தது .

இவ்வழக்கில் விசாரணை முடிந்து புதுச்சேரி தொழிலாளர் நீதிமன்றம் நீதிபதி 27.3.2026 அன்று தீர்ப்பு வழங்கினார் .

நாம் தமிழர் தொழிலாளர் நலச்சங்கம் வழக்கில் பத்தாண்டுகள் மேலாக தொடர்ச்சியாக L&T தொழிற்சாலையில் பணிபுரிந்த தொழிலாளர்கள் R.கிருஷ்ணமூர்த்தி சிசண்முகவேல் A.செகதீசன் அனைவருக்கும் L&T நிர்வாகம் உடனடியாக பணி நிரந்தரம் செய்ய வேண்டும் . அத்தொழிலாளர்களுக்கு 2019 ஆம் ஆண்டு முதல் பணி நிரந்தரம் தொழிலாளர்களுக்குரிய ஊதியம் மற்றும் அனைத்து சலுகைகளுக்குரிய பணபலன்களை இரண்டு மாதங்களுக்குள் வழங்க வேண்டுமென புதுச்சேரி தொழிலாளர் நீதிமன்றம் நீதிபதி TMT.G.T.அம்பிகா அவர்கள் தீர்ப்பு வழங்கி உள்ளார் ,

தொழிலாளர்களின் வாழ்வுரிமையின் பாதுகாப்பினை உறுதி செய்த புதுச்சேரி தொழிலாளர் நீதிமன்றம் நீதிபதி TMT.G.T.அம்பிகா அவர்களுக்கும் L&Tதொழிலாளர்கள் உரிமைகள் காக்க சமரசமில்லாமல் உண்மையும் உறுதியோடு சட்டப்போராட்டம் நடத்திய சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் P.Rதிருநீலகண்டன் புதுச்சேரி தொழிலாளர் நீதிமன்றம் வழக்கறிஞர் A.மிதுன்சக்கரவர்த்தி அவர்களுக்கும் புதுச்சேரி நாம் தமிழர் தொழிலாளர் நலச்சங்கத்தின் சார்பாக நன்றியும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம் L&Tநிர்வாகம் புதுச்சேரி தொழிலாளர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை விரைந்து நடைமுறை படுத்த வேண்டுமென நாம் தமிழர் தொழிலாளர் நலச்சங்கம் வலியுறுத்திகின்றோம்.

இந்நிகழ்வில் தொழிற்சங்க நிர்வாகி த.இரமேசு L&Tதொழிலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி கோபு உடனிருந்தனர் .

# புதுச்சேரி லாஸ்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட ஜீவானந்தபுரம்மற்றும் நந்தா நகர் பகுதியில் என்.ஆர்.காங்கிரஸ் வேட்பாளர் வி.பி.சிவக்கொழுந்து பிரச்சாரம்





புதுச்சேரி, ஏப்.2–

முதலமைச்சர் ரங்கசாமியின் திட்டங்களால் ஒவ்வொரு குடும்பத்தினரும் பயன்பெறுகிறார்கள் என்று லாஸ்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட ஜீவானந்தபுரம்மற்றும் நந்தா நகர் பகுதியில் பிரச்சாரம்மேற்கொண்ட என்.ஆர்.காங்கிரஸ் வேட்பாளர் வி.பி.சிவக்கொழுந்து தெரிவித்துள்ளார்

புதுச்சேரி லாஸ்பேட்டை சட்டசபை தொகுதியில் என்.ஆர். காங்கி ரஸ் சார்பில் முன்னாள் சபா நாயகர் சப்தகிரி வி.பி.சிவக்கொழுந்து போட்டியிடுகிறார். அவர் அவர் ஜீவானந்தபுரம் பகுதியில் உள்ள ஜலமுத்து மாரியம்மன் கோவிலில் சிறப்பு பூஜை செய்து ஜீவானந்தபுரம் மற்றும் நந்தா நகர் பகுதியில் ‘ஜக்கு’ சின்னத்துக்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடு பட்டார். அப்போது அவர் கூறும்பொழுது

முதலமைச்சர் ரங்கசாமி கடந்த 5 ஆண்டுகால ஆட்சி யில் பெண் குழந்தைகளுக்கு ரூ.50 ஆயிரம் வைப்பு நிதி திட் டத்தை செயல்படுத்தியுள் ளார். உயர்கல்வி படிக்க மாணவ மாணவிகளுக்கு இல வச மடிக்கணினி வழங்கியுள்ளார். காலை, மதியம், மாலை உணவு திட்டங்கள், சீருடை நோட்டு புத்தகங்கள், காலணி கள் சைக்கிள், சென்டாக் மூலம் தேர்வு செய்யப்பட்டு மருத்துவம், பொறியியல் மற்றும் உயர் தொழில்நுட்பகல்வி பயில்பவர்களுக்கு நிதி உதவி என வருங் காலத்தைகருத்தில் கொண்டு மாணவர் களுக்கு ஏராளமான திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்தியுள்ளார்.

இந்த திட்டங்களால் ஒவ் வொரு குடும்பத்தை சேர்ந்த வர்க வர்களும் பயனடைந்துள்ள னர். இந்த திட்டங்கள் தொடர்ந்து செயல் படுத்திட புதுச்சேரியில் தேசிய ஜனநா யக கூட்டணி ஆட்சி தொடர வேண்டும். வருகிற தேர்தலில் முதலமைச்சர் ரங்கசாமியின் கரத்தை வலுப்படுத்த எனக்கு ஜக்கு சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்தார் .

பிரசாரத்தின்போது சப்தகிரி அறக்கட்டளையின் பொறுப்பாளர் சப்தகிரி வி.பி.எஸ்.ரமேஷ்குமார். என். ஆர்.காங்கிரஸ், பா.ஜக அ.தி.மு.க. லட்சிய ஜனநாயக கட்சி மற்றும் கூட்டணி கட்சியினர், சப்தகிரி அறக்கட் டளை நிர்வாகிகள், மகளிர் அமைப்பினர், இளைஞர் அணியினர், வீடு வீடாக சென்று வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை கிய துண்டு பிரசுரங் வழங்கி ஓட்டு கேட்டனர்.

முன்னதாக என் ஆர் காங்கிரஸ் வேட்பாளர் வி பி சிவக்கொழுந்து பிரசாரத்துக்கு சென்ற இடங்களில் அவருக்கு பொதுமக்கள் ஆரத்தி எடுத் தும், மலர் தூவியும் ஆளுயர மாலை அணிவித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# சேலத்தில் தவெக வேட்பாளருக்கு சொந்த கட்சியினரே ஊருக்குள் விடாமல் எதிர்ப்பு.

சேலம். ஏப்.2–

தமிழகத்தில் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் களம் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கி உள்ளது.. பிரதான அரசியல் கட்சிகள் பம்பரமாக சுழன்று வேலை பார்த்து வருகின்றனர்.. முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, சீமான் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி விட்டனர்..



இந்த தேர்தலில் புதிதாக களம் காணும் தவெகவும் தேர்தலுக்கு தயாராகி வருகிறது.. அந்த வகையில் சமீபத்தில் தவெக சார்பில் போட்டியிடும் 234 தொகுதி களுக்கும் வேட்பாளர் களை அறிமுகம் செய்து வைத்தார்..

தவெகவினரும் தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.. சமீபத்தில் 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்த விஜய், பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிடுகிறார்.. மேலும் பெரம்பூரில் இருந்தே தனது தேர்தல் பிரச்சாரத்தையும் விஜய் தொடங்கினார்..

இந்த நிலையில் சேலம் மாவட்டம் மேட்டூர் தொகுதி தவெக வேட்பாளர் செல்வம், மேட்டூர் தொகுதிக்கு உட்பட்ட கொளத்தூர் பகுதி நிர்வாகிகளை சந்திக்க வருகை தந்தார்.. ஊருக்குள் நுழைய விடாமல் தவெகவினர் தடுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.. மேலும் செல்வத்தின் காரை வழிமறித்த தவெகவினர் அவரை ஊருக்குள் நுழைய விடாமல் திருப்பி அனுப்பினர்..

ஜனநாயகன் படத்திற்கு தாங்கள் முன் பதிவு செய்த டிக்கெட்களை வாங்கி தங்களிடமே அதிக விலைக்கு விற்றதாகவும், ஒருதலைபட்சமாக செயல்படுவதாகவும் தவெக வேட்பாளர் செல்வம் மீது குற்றம்சாட்டி உள்ளனர்.. மேலும் தவெக நிர்வாகிகள் பலரும் திரண்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

திரைக்கு வராத ஜனநாயகன் படத்தின் டிக்கெட்களை அதிக விலைக்கு விற்றதாக தவெக வேட்பாளர் மீது, அவர்களின் கட்சியினரே குற்றம்சாட்டி தகராறில் ஈடுபட்டிருப்பது சேலம் மாவட்ட தவெகவில் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பெருமாம்பட்டியில் அரசு உதவி பெறும் பள்ளி வைர விழா







மணப்பாறை ஏப்.2–

மணப்பாறை தாலுகா மணப்பாறை ஒன்றியம் பண்ணப்பட்டி ஊராட்சி பெருமாம்பட்டியில் அரசு உதவிபெறும்மோகன்தாஸ் நடுநிலைப் பள்ளி வைர விழாவில் பள்ளிக்கு விடுமுறை எடுக்காமல் வந்த மாணவிக்கு தாலுகா அளவில் நடைபெற்ற செஸ் போட்டியில் ஐந்தாம் இடம் பெற்ற மாணவி ஆர்.அபிஸ்கா தேவி பதினெட்டாம் இடமும் பெற்ற ஜி. தேவ்பிரசாந்த்க்கு பாராட்டு விழாவும் நடைபெற்றது.

குளித்தலைத் தாலுக்கா மணப்பாறை ஒன்றியம் பண்ணப்பட்டி ஊராட்சி பெருமாம்பட்டி கிராமத்தில் 1951 ஆம் ஆண்டு தொடக்க பள்ளியகா துவங்கி இன்று நடுநிலைப் பள்ளியாக செயல்பட்டு வரும் அரசு உதவி பெறும் மோகன் தாஸ் பள்ளி யில் பயன்று இந்தியாவின் விண்வெளி ஏவு தளத்தி லிருந்தும் பல்வேறு அரசு துறைகளிலும் பணி செய்து வருகிறார்கள்

இப்பள்ளியின் வைரவிழாவிற்கு பள்ளியின் நிர்வாகி வெள்ளத்துரை தலைமை வகித்தார் பள்ளி ஆசிரியர்கள் முன்னிலை வகித்தனர் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சரவணன் வரவேற்புரை நிகழ்த்தினார் இந்திய நட்புறவுக் கலாச்சார கழக தேசிய செயலாளர் இந்திரஜித் மாநில குழு உறுப்பினர் ஜனசக்தி உசேன் வாழ்த்துரை நிகழ்த்தினார்கள்

இப்பள்ளியில் தாலுக்கா அளவில் நடைபெற்ற செஸ் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி மாணவர்களை பாராட்டி இப்பள்ளியில் பயண்று பெங்களூரில் பணியாற்றி வரும் பொருமாளின் மணைவி சுபா நினைவு பரிசு வழங்கினார்.

இவ்வாண்டு எட்டாம் வகுப்பு பயிலும் மாணவி ஆண்டு முழுவதும் விடுமுறை எடுக்காமல் வருகை தந்த கே. மனிஷா அவர்களுக்கு நினைவு பரிசை தலைமை ஆசிரியர் பொறுப்பு சகுந்தலா இடைநிலை ஆசிரியர்கள் கே. கவிதா பி.கவிதா ஆகியோர் வழங்கி கௌரவித்தனர்

பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் செல்லம்மா அனைவருக்கும் நன்றி கூறினார்

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421